பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 04 2026 MONDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) தமிழகம் மற்றும் மேற்குவங்க முதல்கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது.

2) மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அவைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

3) அருணாச்சலப்பிரதேசத்தில் நடைபெற்றதாக கூறப்படும் ஒப்பந்த முறைகேடுகள் தொடர்பாக முதல்கட்ட விசாரணையை தொடங்குமாறு சிபிஐ-க்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4) ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

5) 19 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Dev Ruparelia** தங்கப்பதக்கம் வென்றார்.

... இனி விரிவான செய்திகள்...

<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

**234** தொகுதிகளிலும் இதுவரை **3** ஆயிரத்து **430** வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.

இதில் ஆண் வேட்பாளர்கள் **2** ஆயிரத்து **731** பேரும், பெண் வேட்பாளர்கள் **698** பேரும் மனுதாக்கல் செய்துள்ளனர்.

மூன்றாம் பாலினத்தவர் ஒருவரும் மனுதாக்கல் செய்தனர்.

<<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் **152** தொகுதிகளுக்கு வரும் **23-**ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட தேர்தலில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறுகிறது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற வரும் வியாழக்கிழமை கடைசிநாளாகும்.

மேற்குவங்கத்தில் **142** சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இரண்டாம் கட்டத் தேர்தல் வரும் **29-**ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதனையடுத்து, அம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, **Cooch Behar** பகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாக அக்கட்சித்தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அதீர் ரஞ்சன் சௌத்ரி உள்ளிட்டோர் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

<<<<<<>>>>>

புதுச்சேரியில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், தேசிய கட்சிகளின் தலைவர்களும், பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி-யின் தேசிய தலைவர் திரு நிதின் நபின், மனவேலி தொகுதியில் தமது கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

தமது கட்சி ஆட்சிக்கு வந்தால், அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

ஆட்சிப்பொறுப்பேற்ற ஆறு மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின், நாம் தமிழர் கட்சித் தலைவர் திரு சீமான் உள்ளிட்டோரும் புதுச்சேரியில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

<<<<<<>>>>>

மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அவைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

மத்திய இணையமைச்சர் திரு **Ramdas Athawale,** திரு **Sharadchandra Pawar,** திரு **Santrupt Mishra,** திரு **Manmohan Samal,** டாக்டர் **Jyoti Nagnath, Ramrao Sakharam Wadkute** உள்ளிட்டோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

<<<<<<>>>>>

பிஜேபி—யின் **47**-ஆவது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மக்களுக்கு சேவை செய்வதிலும், நாட்டிற்கு முன்னுரிமை என்ற கொள்கையிலும் பிஜேபி செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

கட்சித் தொண்டர்கள் தன்னலமற்ற சேவையை அர்ப்பணிப்பு உணர்வோடு ஆற்றிவருவதாகவும், இதனால் சிறந்த அரசு நிர்வாகம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் தொன்மை மிக்க சரித்திரத்தையும், இந்திய கலாச்சாரத்தின் மாண்புகளையும் வெளிக்கொண்டு வருவதிலும், பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்காகவும் உறுதியுடன் கட்சி செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் விடுத்துள்ள செய்தியில், நாட்டிற்கு முன்னுரிமை அளித்து முழு ஆற்றலோடு கட்சித்

தொண்டர்கள் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நாளையொட்டி, கட்சியின் மூத்த தலைவரும், இணையமைச்சருமான டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தேசிய சிந்தனையோடு ஜனநாயக மாண்புகளையும் கொண்டு நாட்டை கட்டமைப்பதற்காக கட்சி தொண்டர்கள் பாடுபட வேண்டும என்றும் கேட்டுக்கொணடார்.

நாட்டின் கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் நலத்திட்டங்களின் பயன்கள் சென்றடைய வேண்டும் என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

பெட்ரோ கெமிக்கல் பொருட்களுக்கு சுங்கவரி விலக்கு வரும் ஜூன் 30-ஆம் தேதிவரை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தொழில் நிறுவனங்களில் பெட்ரோ கெமிக்கல் பொருட்கள் எளிதாக கிடைக்க இது வழிவகை செய்யும்.

பெட்ரோ கெமிக்கல்களை பயன்படுத்தும் நெகிழி, ஜவுளி, மருந்துகள் துறையில் இது பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

<<<<<<>>>>>

அருணாச்சாலப்பிரதேச அரசில் நடைபெற்றதாக கூறப்படும் ஒப்பந்த முறைகேடுகள் தொடர்பாக, முதல்கட்ட விசாரணையை மேற்கொள்ளுமாறு சிபிஐ-க்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முதலமைச்சர் திரு பேமகாண்டு மற்றும் அவர்களது உறவினர்களுக்கு சொந்தமான நிறுவனங்கள் இந்த முறைகேட்டில் ஈடுபட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த முறைகேடு தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ய மத்திய புலனாய்வு பிரிவு 16 நாள் காலஅவகாசம் கேட்டுக்கொண்டுள்ளது.

சிபிஐ தாக்கல் செய்யும் முதல்கட்ட அறிக்கையின் அடிப்படையில், தன்னிச்சையான முழு விசாரணை நடத்துவது குறித்து உச்சநீதிமன்றம் முடிவு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து 2025-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

தேவைப்பட்டால் இந்த காலக்கட்டத்தை கடந்தும் விசாரணை மேற்கொள்வதற்கு சிபிஐ-க்கு அதிகாரம் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் நூறு சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் கடைகோடி கிராமங்களில் மாவட்ட நிர்வாகம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் - 52 Sec. )***

ஈரோடு மாவட்டத்தில் பவானி சாகர் அணையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — மூர்த்தி - 36 Sec. )***

<<<<<<>>>>>

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நேற்று நள்ளிரவு நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

ஜெட் விமானங்கள் குறைந்த உயரத்தில் பறந்து வெடிகுண்டுகளை வீசியதால் பலத்த சத்தம் கேட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இஸ்ரேல் தனது எல்லைப்பகுதியில் ஏவுகணை தாக்குதல் நடைபெறக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள துபாயில் வான்வழி தாக்குதல் நடைபெறக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் தாக்குதல் நடைபெறக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையை வான்வழி தடுப்பு அமைப்புகள் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டு அரசு நடத்தும் நாளேடு வெளியிட்டுள்ள செய்தியில், Qom நகரில் குடியிருப்பு பகுதிகளுக்குள் அமைந்திருந்த தொழுகை கூடத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நேபாளத்தில் நாடாளுமன்ற பேரவை உறுப்பினர்கள் கூட்டமும், மேலவை உறுப்பினர்களின் கூட்டமும் இன்று நடைபெறுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேரவை உறுப்பினர்களின் கூட்டம் தற்போது தொடங்கியுள்ளது.

மேலவை உறுப்பினர்கள் கூட்டம் பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்கும்.

உள்துறை அமைச்சர் திரு **Sudhan Gurung**, வாக்காளர் பட்டியல் முதலாவது திருத்தத்திற்கான அவசரச் சட்டத்தை தாக்கல் செய்கிறார்.

தேர்தல் முதலாவது திருத்தத்திற்கான அவசரச் சட்டத்தை அவர் தாக்கல் செய்ய உள்ளார்.

நேபாளத்தில் சிறப்பு பணிகளுக்கான இரண்டாவது திருத்தத்திற்கான அவசரச் சட்டமும் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

நேபாள பிரதமர் திரு பாலேந்திர ஷா, அந்நாட்டின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கையையும் பேரவையில் தாக்கல் செய்கிறார்.

அந்நாட்டில் பெட்ரோலியப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக, அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்கு வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை அளிக்கப்படும் என்றும் நேபாள அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Dev Ruparelia** தங்கப்பதக்கம் வென்றார்.

பிரான்சில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **16-21, 21-11, 21-10** என்ற செட் கணக்கில், சகநாட்டு வீரரான **Jagsher Khangurra-**வை வீழ்த்தி இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

கியூபா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நிதின் ராகவேந்தர் பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<<END>>>>>